2022 மார்ச் 22]

பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

33—

அடுக்குமாடிக் குடியிருப்பு

***1914—திரு. கே. பொன்னுசாமி:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்பு கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சேந்தமங்கலம் தொகுதியில் தற்போது அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டும் திட்டம் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள்.*

திரு. கே. பொன்னுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதியில் ஐந்து பேரூராட்சிகள் உள்ளன. அந்தப் பேரூராட்சிப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்குச் சொந்தமான நிலமோ, வீடோ இல்லாமல் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, வாடகை வீட்டில் வசித்து வருகிறார்கள். கொரோனா பெருந்தொற்று காலங்களில் அந்தக் கட்டடத்திற்கு வாடகைகூட கட்ட முடியாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, அந்தப் பகுதி மக்கள் பயன்பெறும்வகையில், நகர்ப்புர வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டும் திட்டத்தின்மூலம் வீடுகள் கட்டித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 60 அடுக்குமாடிக் குடியிருப்புகள் வாடகைக் குடியிருப்புகளாக இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் 51 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதன் அடிப்படையிலே அங்கே ஆய்வு செய்து, கண்டிப்பாக அவசியம் என்ற சூழ்நிலை இருந்தால், வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். பல இடங்களில் வீடுகள் கட்டப்பட்டு, அந்த வீடுகள் பயன்பாட்டில் இல்லாமல், யாரும் அதனைக் கேட்காமல் இருக்கின்ற காரணத்தினால், மிகத் தெளிவாக ஆய்வு செய்து, அவசியம் என்றால் வீடுகள் கட்டுவதற்குண்டான நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.*

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள்.*

திரு. கே. பொன்னுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம ஊராட்சிகளில் வீடுகள் கட்டும் திட்டம் நடைமுறையில் உள்ளது. பேரூராட்சிப் பகுதிகளில் அதுபோன்று வீடு கட்டும் திட்டம் இல்லை. அதனால், அந்தப் பகுதி மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பேரூராட்சிப் பகுதிகளில் வீடுகள் கட்டும் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெங்கு அவசியம் இருக்கிறதோ, அங்கு ஆய்வு செய்து, வீடுகள் கட்டுவதற்குண்டான நடவடிக்கைகளை, வீட்டு வசதி வாரியம் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. K. ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

2022 மார்ச் 22]

திரு. K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, உடுமலைப்பேட்டை நகராட்சியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகக் கட்டப்பட்ட வீடுகள், ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. அந்த வீடுகளைப் புனரமைப்பு செய்து, சுற்றுச்சுவர் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன வீடுகள், ஏற்கெனவே விற்கப்பட்டு, தனியார் வாங்கியிருந்தால், அவர்களோடு இணைந்து அந்தப் பணிகளைச் செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்யலாம். ஒருவேளை அந்த வீடுகள் வாடகைக்கு விடப்பட்டிருந்தால், முழு பொறுப்பும் வாரியத்திற்கு உண்டு. அதனைச் சரிசெய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதுபோன்று பல இடங்களில், கட்டடங்கள் இடிந்து மிக மோசமான நிலையில் இருக்கின்றன, அதையெல்லாம் கணக்கெடுத்திருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அதற்காக நிதிநிலை அறிக்கையிலே ஒரு கருத்தைக் குறிப்பிட்டு, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று எங்களிடம் சொல்லியிருக்கின்றார்கள். நிச்சயமாக புதிதாகக் கட்டிக் கொடுப்பதற்கான நடடிவக்கைகளை அரசு எடுக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி அவர்கள்.*

திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சிவகங்கை மாவட்டம், எனது மானாமதுரை தொகுதியில், மானாமதுரை ஒன்றியத்தில், அரசுப் புறம்போக்கு இடங்கள் அதிகமாக உள்ளன. வீடற்றவர்கள், ஏழையெளியோர் அதிகம் உள்ளனர். அவர்களுக்கான வாழ்விடத்தை ஏற்படுத்தித் தர, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அமைச்சரவையில் அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள், வீட்டு வசதி வாரியம் மூலமாக*

அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டித்தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி, ஒவ்வொரு மாவட்டத்திலேயும், ஒவ்வொரு நகரத்தையொட்டியும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அங்கே என்ன demand இருக்கிறது என்பதைப் பார்த்து, அதற்கேற்ப பணிகளைத் துவக்கலாம் என்று நாங்கள் கருதுகிறோம். காரணம், ஏற்கெனவே வீடு கட்டும் திட்டத்தின்மூலம் கட்டப்பட்ட வீடுகள் பல ஆண்டுகளாக காலியாக இருக்கின்ற சூழ்நிலை உள்ளதால், அதனையெல்லாம் ஆய்வு செய்து, எங்கு அவசியம் இருக்கிறதோ, அங்கு வீடுகளைக் கட்டுவதற்கான நடவடிக்கைகளை நிச்சயமாக வீட்டு வசதி வாரியம் எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. ராஜா, மாண்புமிகு சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.

34—

ஆதரவற்றோர் இல்லம்

4092*—திரு. ஈ. ராஜா:**

மாண்புமிகு சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரன்கோவில் தொகுதி, சங்கரன்கோவிலில் ஆதரவற்றோர் இல்லம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது சங்கரன்கோவில் தொகுதியில், ஆதரவற்ற குழந்தைகள், பெண்கள் மற்றும் முதியவர்களுக்கு